இடை

# சாத்தான்குளம் / தேர்தல்

## The C&C Poll

in collaboration with
Vis.Com. & PGDMP, Loyola College, Chennai

## கட்சித் தலைவர்களின் பிரச்சாரத்துக்கு முன் கருத்துக் கணிப்பு

*திமுக, பா.ஜ.க. ஓட்டு யாருக்கு?*

மூன்றாவது அணி உருவாகியிருந்தால்...?

**கோபத்திலும் பேரத்திலும் கிறிஸ்தவர்கள்...!**

**மௌனப் புரட்சியில் முஸ்லிம்கள்...!**

***சாத்தான்குள வாக்காளர் மனம் கவர்ந்த அரசியல் தலைவர் யார்?***

**ரஜினி...?**
**நடிகர்கள் பிரச்சாரம்...?**

the C&C Poll
**welcome for the press meet**
**to know the results**

***இடம்:*** **பண்பாடு-மக்கள் தொடர்பகம்**
**லொயோலா கல்லூரி வளாகம், சென்னை**

***நாள்:*** 13.02.2003, காலை 10.30 மணி

# சாத்தான்குளம் இடைத்தேர்தல்

## The C&C Poll

## (கட்சித் தலைவர்களின் நேரடிப் பிரச்சாரத்துக்கு முன் நிலவரம்)

லொயோலா கல்லூரியின் பண்பாடு–மக்கள் தொடர்பகமும் விஷுவல் கம்யுனிகேஷன் மற்றும் மீடியா பிரசன்டேஷன் துறைகளும் இணைந்து, **பேரா. ச. ராஜநாயகம்** அவர்கள் தலைமையில், பதினைந்து பேர் அடங்கிய குழு ஒன்று, கட்சித் தலைவர்களின் நேரடிப் பிரச்சாரத்துக்கு முன் சாத்தான் குளம் தொகுதி வாக்காளரின் மனநிலையை ஆய்ந்தறியக் களமிறங்கியது.

07.02.03 அன்று பிற்பகலில் தொடங்கி 10.02.03 அன்று காலை நிறைவுற்ற இந்தக் கருத்துக் கணிப்பில் 1692 பேர் கலந்து கொண்டனர் (தொகுதியின் மொத்த வாக்காளரில் ஏறத்தாழ 1.0%). நாற்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களிலும் அனைத்து முக்கிய நகரங்களிலும் இக் கணிப்பு நடத்தப்பட்டது. தமிழ்ப் பண்பாட்டு–அரசியல் சூழலுக்கேற்ப, பேரா. ச. ராஜநாயகம் அவர்களால் வடிவமைக்கப்பட்ட, **சமூக-உளவியல் அணுகுமுறையே** இங்கும் பின்பற்றப்பட்டது. பங்கேற்றோரில், 54% குக்கிராமங்களையும், பிறர் பெரிய கிராமங்களையும் சிறு நகரங்களையும் சேர்ந்தவர்கள். இவர்களில், நான்கில் ஒரு பகுதியினர் மட்டுமே பெண்கள்.

கணிப்பில் கலந்துகொண்டோரில், 56.5% சன் டி.வி.யை விரும்பிப் பார்க்கிறார்கள் (பிறவற்றில்: ஜெயா – 9.1%, ராஜ் – 3.9%, தூர்தர்ஷன் – 3.7%, விஜய் – 1.8%). எந்தத் தொலைக்காட்சியும் பார்க்காதோர் 20.6%. அவ்வாறே, செய்தித்தாள் வாசிப்பதிலும், 22% எந்தத் தினசரியும் வாசிப்பதில்லை. எனினும் தினத்தந்தி பரவலாக வாசிக்கப்படுகிறது (தினத்தந்தி – 49.1%, தினமலர் – 16.1%, தினகரன் – 3.8%, தினமணி – 3.3%).

### யாருக்கு வாக்கு?

வாக்காளரில் பெரும்பாலோர் காங்கிரஸுக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் எனக் கருதுகின்றனர். அதிமுக–வை விட 17% அதிக ஆதரவு பெற்று காங்கிரஸ் முன்னணியில் இருக்கிறது. சுயேட்சை வேட்பாளர்களை ஆதரிப்போர் வெறும் 0.6% தான். ஆக, களமிறங்கியுள்ள சுயேட்சை வேட்பாளர்களால் ஓட்டுக்கள் பிரிக்கப்படவில்லை. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில், காங்கிரஸுக்கும் அதிமுக–வுக்கும் இடையிலான போட்டி மிகக் கூர்மையாக உள்ளது.




கடந்த சட்டமன்றத் தேர்தலோடு ஒப்பிடுகையில் இந்த இடைத் தேர்தல் முற்றிலும் மாறுபட்ட கூட்டணிக் கணக்கைக் கொண்டுள்ளது. போன முறை தமகா–வை ஆதரித்த அதிமுக–வே இந்த இடைத் தேர்தலில் காங்கிரஸை எதிர்த்து நிற்கிறது. பாஜக–வை ஆதரித்த திமுக இடைத் தேர்தலைப் புறக்கணித்துள்ளது. பாஜக–வோ போட்டியிலிருந்து ஒதுங்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், கடந்த முறை தமாக–வுக்கு வாக்களித்தோரில் 44.8% அதிமுக–வுக்கும், 52.9% காங்கிரஸுக்கும் வாக்களிக்கின்றனர். ஆனால், பாஜக–வுக்கு வாக்களித்தோரில் 34.6% மட்டுமே இம் முறை அதிமுக–வுக்கு வாக்களிக்க, 60.2% காங்கிரஸை ஆதரிக்கின்றனர்.

திமுக தேர்தலைப் புறக்கணித்திருப்பதால் அதிக ஆதாயம் அடைவது காங்கிரஸ்தான் என்பது கணிப்பில் பங்கேற்றோரின் பெருவாரியான கருத்தாக உள்ளது (காங்கிரஸுக்கு சாதகமாக – 68.4%, அதிமுக–வுக்கு – 15.8%, யாருக்கும் சாதகமாக இல்லை – 13%). போட்டியிலிருந்து பாஜக ஒதுங்கியிருப்பது அதிமுக–வுக்கு அதிகம் சாதகமாக உள்ளதாகக் கருத்து நிலவுகிறது (அதிமுக–வுக்குச் சாதகமாக – 49.2%, காங்கிரஸுக்கு – 29.3%). வெவ்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் யாருக்கு வாக்களிக்க உத்தேசித்துள்ளார்கள் என்பது, இக் கருத்தை உறுதி செய்கிறது. திமுக உறுப்பினர்களில் 88.5% காங்கிரஸுக்கும், பாஜக உறுப்பினர்களில் 77.8% அதிமுக–வுக்கும் வாக்களிக்க முடிவு செய்துள்ளது குறிப்பிடத் தக்கது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், அதிமுக–வை விட காங்கிரஸுக்கே பிற கட்சிகளின் ஆதரவு அதிகமிருப்பதாகக் கருத்து நிலவுகிறது (காங்கிரஸுக்கு – 51.2%, அதிமுக–வுக்கு – 31.4%).

## மதரீதியாக வாக்கு:

சாத்தான்குளம் தொகுதியில் மதம் ஒரு வேட்பாளரின் வெற்றி–தோல்வியை நிர்ணயிக்கும் முக்கியமானதொரு காரணியாகத் திகழ்கிறது. இந்துக்களின் வாக்கு, காங்கிரஸைவிட அதிமுக–வுக்கு 6% அதிகமாகச் செல்கிறது (அதிமுக – 50.8%, காங்கிரஸ் – 44.8%). கிறிஸ்தவர் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகள் பெருவாரியாகக் காங்கிரஸுக்கே செல்கின்றன. பொதுவாகவே, சிறுபான்மையோர் காங்கிரஸுக்கு அதிக ஆதரவு தெரிவித்தாலும், கிறிஸ்தவர்களோடு ஒப்பிடுகையில் முஸ்லிம்கள் சற்று அதிகமாக அதிமுக–வை ஆதரிப்பதைக் காண முடிகிறது (கிறிஸ்தவர் – 18.8%, முஸ்லிம் – 29.4%).







கிறிஸ்தவர்களிலும், கத்தோலிக்கத் திருச்சபையினருக்கும் (RC) தென்னிந்தியத் திருச்சபையினருக்கும் (CSI) குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் வெளிப்படுகின்றன. சி.எஸ்.ஐ. சபையினரைவிட ஆர்.சி. சபையினர் அதிகமாகவே அதிமுக–வை ஆதரிக்கின்றனர் (ஆர்.சி. – 26.7%, சி.எஸ்.ஐ. – 14.1%).




## சாதிரீதியாக வாக்கு:

சாத்தான்குளத் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் மற்றொரு முக்கியமான காரணி சாதி. தொகுதியில் மெஜாரிட்டி சாதியாகிய நாடாரில் 71.6% காங்கிரஸை ஆதரிக்கிறார்கள். அவ்வாறே, தாழ்த்தப்பட்டோர், பறவர், கோனார் ஆகிய சாதிகளில் அதிமுக–வை விட காங்கிரஸுக்கு அதிக ஆதரவுள்ளது (தாழ்த்தப்பட்டோரில்: அதிமுக – 34.4%, காங்கிரஸ் – 59.9%. பறவரில்: அதிமுக – 38.5%, காங்கிரஸ் – 61.5%. கோனாரில்: அதிமுக – 41%, காங்கிரஸ் – 48.7%). ஆனால் முக்குலத்தோரின் மிகப் பெரும்பான்மையான ஆதரவு அதிமுக–வுக்கு உள்ளது (73.1%).




ஆசாரி மற்றும் பிள்ளை ஆகிய சாதிகளில் காங்கிரஸைவிட சிறிது அதிகமான ஆதரவு அதிமுக-வுக்கு உள்ளது (ஆசாரிமாரில்: அதிமுக - 50%, காங்கிரஸ் - 40%. பிள்ளைமாரில்: அதிமுக - 50%, காங்கிரஸ் -46.4%). முஸ்லிம்களின் சில உபசாதிகள் உள்ளிட்ட பிற சாதிகளைப் பொருத்த அளவில் காங்கிரஸுக்கு 60.7%-ம் அதிமுக-வுக்கு 33.8%-ம் ஆதரவுள்ளது.

### வயதும் வாக்கும்:

ஆண்களும் பெண்களும் அதிமுக-வை விட காங்கிரஸ் பக்கமே அதிகம் சாய்ந்திருந்தாலும், ஆண்கள் சிறிது அதிகமாக அதிமுகவைச் சார்ந்துள்ளனர் (ஆண்களில்: காங்கிரஸ் - 56.5%, அதிமுக - 40.7%. பெண்களில்: காங்கிரஸ் - 56%, அதிமுக - 35.3%). வயது அடிப்படையிலும் காங்கிரஸுக்கே அதிகம் ஆதரவு உள்ளது (25 வயதுக்குக் கீழ்: காங்கிரஸ் - 54.2%, அதிமுக - 41.1%. இருபத்தைந்துக்கு மேல் 40 வரை: காங்கிரஸ் - 55.6%, அதிமுக - 41.4%. நாற்பதுக்கு மேல்: காங்கிரஸ் - 57.8%, அதிமுக - 36.8%).

### தொழிலுக்கேற்ப வாக்களிக்கும் போக்கு:

நகரப் பகுதிகளைவிட, கிராமப்புரங்களில் அதிமுக-வின் செல்வாக்கு அதிகமாக இருந்தாலும், ஒட்டுமொத்தத்தில் இவ்விரு பகுதிகளிலும் காங்கிரஸே முன்னிலை வகிக்கிறது (கிராமம்: அதிமுக - 44.4%, காங்கிரஸ் - 51%. நகரம்: அதிமுக - 33.4%, காங்கிரஸ் - 62.7%).

தொழில் அடிப்படையில் பார்த்தாலும், அனைத்துத் தரப்பினரும் காங்கிரஸை அதிகம் ஆதரிக்கின்றனர் (விவசாயிகள்: காங்கிரஸ் - 50%, அதிமுக - 46%. சுயவேலை செய்வோர்: காங்கிரஸ் - 58.5%, அதிமுக - 38.5%. மாதஊதியம் பெறுவோர்: காங்கிரஸ் - 69.7%, அதிமுக - 27.3%. இல்லத்தரசிகள்: காங்கிரஸ் - 46.2%, அதிமுக - 38.5%. வேலையற்றோர்: காங்கிரஸ் - 57.4%, அதிமுக - 35.1%). மாணவர்களின் வாக்கு மட்டும் இரு கட்சிகளுக்கும் சமமாகப் பிரிகிறது (அதிமுக - 50%, காங்கிரஸ் - 50%).

### கல்வியின் தாக்கம்:

வாக்காளரின் கல்விநிலை உயர்வதற்கேற்ப, அதிமுக-வுக்கு அளித்துவரும் ஆதரவு குறைந்துகொண்டே வர, காங்கிரஸுக்கான ஆதரவு அதிகரித்துக்கொண்டே வருகிறது (ஆரம்பக்கல்வி வரை: அதிமுக - 45.7%, காங்கிரஸ் - 49.3%. பிளஸ்-2 வரை: அதிமுக - 39.5%, காங்கிரஸ் - 56.1%. கல்லூரி & தொழிற்கல்வி: அதிமுக - 28.6%, காங்கிரஸ் - 68.6%). எனவே, வாக்களிக்கும் போக்கில் அழுத்தமான தாக்கத்தைக் கல்வி ஏற்படுத்துவதை அறியமுடிகிறது.

### வேட்பாளர்களின் தகுதி:

தற்போது களமிறங்கியுள்ள வேட்பாளர்களில், தனிப்பட்ட அளவில் தமக்குப் பிடித்தவராக காங்கிரஸ் வேட்பாளர் முதலிடம் பெறுகிறார் (காங்கிரஸ் ~ 40.8%, அதிமுக ~ 29.2%). எனினும், கணிசமான அளவு வாக்காளர்கள் தமக்கு யாரையும் பிடிக்கவில்லை (28.7%) எனக் கருத்துத் தெரிவித்திருப்பது கருதத் தக்கது.

### பிரச்சனைகளைத் தீர்க்கும் கட்சி:

சாத்தான்குளம் தொகுதியின் சில அடிப்படைப் பிரச்சனைகளாக, குடிதண்ணீர் தட்டுப்பாடு (30.9%), போக்குவரத்து வசதியின்மை (12.5%), வேலையில்லாத் திண்டாட்டம் (8%), சீரற்ற ரேஷன் விநியோகம் (7.3%), விவசாயிகள் பிரச்சனை (4%) முதலியவை குறிப்பிடப்படுகின்றன. தொகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் திறமையுள்ள கட்சியாக அதிமுக-வையே பெரும்பாலான வாக்காளர்கள் கருதுகின்றனர் (அதிமுக - 34.8%, காங்கிரஸ் - 28.6%). எனினும் மிகக் கணிசமான வாக்காளர்கள் யார் ஜெயித்தாலும் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது என்ற கருத்தையும் தெரிவித்துள்ளனர் (32.2%).

### நடிகர்களின் ஈடுபாடு:

இந்த இடைத் தேர்தலில், தற்போதுள்ள வேட்பாளர்களுக்குப் பதிலாக, நடிகர்கள் போட்டிக் களமிறங்கியிருந்தால், அவர்களுக்கு வாக்கு விழுந்திருக்கும் என்ற உத்திரவாதமில்லை. தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தால் மட்டுமே நடிக வேட்பாளருக்கு வாக்கு என்பதே பெரும்பான்மைக் கருத்தாக உள்ளது (59.7%). அவர் தனது கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் நடிகர் என்பதாலேயே அவருக்கு வாக்களிக்கப்போவதில்லை என்போர் 27.3%. கட்சியைப் பார்க்காமல் வாக்களிக்கத் தயாராயிருப்போர் வெறும் 11.3% மட்டுமே.

அவ்வாறே, நடிகர்களைப் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்துவதிலும் எந்தப் பயனும் விளையப் போவதில்லை என 48.8% கருத்துத் தெரிவித்துள்ளனர் (பிற பதில்கள்: கூட்டம் சேர்க்க மட்டுமே நடிகர்கள் பயன்படுவார்கள் - 21.6%, வாக்குகள் கொஞ்சம் கூடுதலாகலாம் - 20.3%, வெற்றிக்கு வழிகோலும் - 8.2%). இது, இத் தொகுதி மக்களின் வாக்களிக்கும் போக்கு சினிமாக் கவர்ச்சியின் பாதிப்பிலிருந்து பெருமளவு விடுபட்டிருப்பதைக் காட்டுகிறது.

எனினும், ரஜினியைப் பொருத்த மட்டில் தொகுதி மக்களின் அணுகுமுறையில் வித்தியாசம் வெளிப்படுகிறது. மூன்றாவது வேட்பாளராக ரஜினியே போட்டியில் குதித்திருந்தால், அவருக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் (ரஜினி - 33.2%, காங்கிரஸ் - 31%, அதிமுக - 26.6%). ரஜினிக்குப் பதிலாக, அவர் ஆதரவுடன் ஒருவர் போட்டியிட்டால் அவர் கணிசமாக வாக்குகள் பெற வாய்ப்புள்ளது (ரஜினி ஆதரவு பெற்றவர் - 28%, காங்கிரஸ் -34.6%, அதிமுக - 28%).

தேர்தல் களத்திலிருந்து ரஜினி ஒதுங்கியுள்ள தற்போதைய சூழ்நிலையில், அவரைத் தமக்குப் பிடித்த நடிகர் என்போரில், 60.9% காங்கிரஸுக்கும், 39.1% அதிமுக-வுக்கும் வாக்களிக்க உத்தேசித்துள்ளார்கள். ஆனால் விஜயகாந்த் ரசிகர்களில், 46.4% மட்டும் காங்கிரஸுக்கும், 50% அதிமுக-வுக்கும் ஆதரவு தெரிவிக்கிறார்கள். (பிடித்த நடிகர்கள்: ரஜினி - 13.6%, எம்.ஜி.ஆர். - 11.2%, சிவாஜி - 11.2%, விஜயகாந்த் - 6.6%, பிரசாந்த் - 2.4%, பிறர் - 28%, யாருமில்லை - 27%).

### பிரச்சார உத்தி:

இந்தத் தேர்தலை முன்னிட்டு, தொகுதி மக்களுக்கு அதிக சலுகைகளைச் செய்யும் கட்சியாக அதிமுக சுட்டிக் காட்டப்படுகிறது (அதிமுக - 58.3%, காங்கிரஸ் - 9.6%). இது வரை தொகுதியில் நடந்துள்ள தொடக்க கட்டப் பிரச்சாரத்தைப் பொருத்த அளவில், தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்குச் சிறப்பாக அமைந்திருப்பதாக அதிமுக-வின் பிரச்சாரம் அடையாளம் காட்டப்படுகிறது (அதிமுக - 60.3%, காங்கிரஸ் - 7.3%). மிகுந்த பொருள் செலவில் அமைந்த ஆடம்பரமான பிரச்சாரமாகவும் அதிமுக-வின் பிரச்சாரம் கருதப்படுகிறது (அதிமுக - 81.6%, காங்கிரஸ் - 4%).

### நடுநிலையான ஊடகம்:

தொலைக்காட்சி சேனல்களில் மிகவும் விரும்பிப் பார்க்கப்படுவதாகக் கூறப்படும் சன் டி.வி., தேர்தலை ஒட்டிய நடுநிலையான, நம்பகமான செய்திகளைத் தருகின்ற சேனல்கள் வரிசையிலும் முதலிடம் பிடிக்கிறது (25.5%). ராஜ் டி.வி. இரண்டாம் இடம் வகிக்கிறது (22.1%). (பிறவற்றில், தூர்தர்ஷன் - 14.1%, விஜய் - 11.9%, ஜெயா - 5.8%.) செய்தித்தாள்களில், அதிகம் வாசிக்கப்படும் தினத்தந்தியே நடுநிலை அரசியல் செய்திகளைத் தருவதிலும் முன்னணியில் நிற்கிறது (37.4%). தினமலர் இரண்டாம் இடமும் (22.2%), தினமணி மூன்றாம் இடமும் வகிக்கின்றன (9.9%).

### தேர்தல் ஆணையம்:

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து, தொகுதி வாக்காளரிடையே ஓரளவு திருப்தி நிலவுகிறது. ஆணையம் நடுநிலையில் நிற்பதாக 63% கருதுகின்றனர். எனினும் அது காங்கிரஸுக்குச் சாதகமாகச் செயல்படுவதாக 3.1%-ம், அதிமுக-வுக்குச் சாதகமாகச் செயல்படுவதாக 28.4%-ம் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### பிடித்த அரசியல் தலைவர்:

இந்த இடைத் தேர்தலில் திமுக போட்டியிடாமல் தேர்தலையே புறக்கணிப்புச் செய்வதாக அறிவித்திருந்தாலும், தொகுதி மக்களால் பரவலாக விரும்பப்படும் தலைவராக கருணாநிதி முதலிடம் பெறுகிறார். இவரைத் தாம் விரும்பும் தலைவராகக் கருதுவோரில், 89.2% காங்கிரஸுக்கும் 7.9% அதிமுக-வுக்கும் ஆதரவு தருகின்றனர்.




### அடித்தளப் போக்குகளும் மக்களின் மனநிலையும்:

தொகுதி முழுவதும் பயணம் செய்த ஆய்வுக் குழுவினர் சேகரித்த எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) தரவுகளை ஒருங்கிணைத்துப் பார்க்கையில், கீழ்வரும் அடித்தளப் போக்குகள் கவனிக்கத்தக்கவை.

♦ அதிமுக ஆளும் கட்சி என்பதால் தொகுதியின் நீண்டகால மற்றும் உடனடித் தேவைகளை நிறைவேற்ற அக் கட்சியால் மட்டுமே முடியும் என்ற எண்ணம் பரவலாக உள்ளது. பலருடைய மனதில் ஆண்டிபட்டி ஒரு மாடலாக நிற்பது வெளிப்படுகிறது.

♦ பல ஆண்டுகளாக ஒரே கட்சிக்கு வாக்களித்து வந்ததால், ஒரு மாற்றத்திற்காக வேறொரு கட்சிக்கு வாக்களித்தால் என்ன என்ற எண்ணம் அரும்பத் தொடங்கியுள்ளது.

♦ கிறிஸ்தவ வாக்காளர்கள், குறிப்பாக ஆர்.சி. பிரிவினர், இன்னும் அதிகமாக அதிமுக பக்கம் சாய்வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

♦ காங்கிரஸின் ஒருங்கிணைக்கப்படாத பிரச்சாரத்தால், நடுநிலை வாக்காளர்களைக் கணிசமாக இழப்பதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகலாம். அதே வேளையில், அதிமுக-வின் மிதமிஞ்சிய பிரச்சாரத்தால் வாக்காளர் மத்தியில் மிரட்சியும் சலிப்பும் ஏற்படுவதற்கான தொடக்கங்களை ஏற்கெனவே காண முடிகிறது.

### வாக்கு வித்தியாசம்:

மேலுள்ள போக்குகளைக் கவனத்தில் கொண்டு, முதல்நிலைக் கட்சித் தலைவர்கள் தங்கள் பிரச்சாரத்தைத் தொடங்கும் முன்பாக உள்ள தற்போதைய நிலவரப்படி, அதிமுக-வை விட காங்கிரஸ் முன்னணியில் உள்ளது. தொகுதி மக்களிடையே வலுவாக வெளிப்படும் கருத்துப்படி, கடந்த தேர்தலில் பதிவான அதே அளவு வாக்குகள் இப்போதும் பதிவாகுமானால், **அதிகபட்சமாக 10,000 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் வெற்றிபெறும்.** வரும் நாள்களில் தொகுதியில் தலைவர்கள் மேற்கொள்ளும் பிரச்சாரத்தின் தன்மைக்கேற்பவும் தேர்தல் நாளன்று பதிவாகப்போகும் வாக்குகளுக்கு ஏற்பவும் இந்த வித்தியாசம் மேலும் *குறுகக்* கூடும்.

**பேரா. ச. ராஜநாயகம் & குழு**
லொயோலா கல்லூரி
சென்னை 600 034
13 பெப்ரவரி 2003